# திருமணிக் கூடம்

திருமணிக்கூடம்:- திருநாங்கூர் திருப்பதிகளுள் (திவ்ய தேசங்களில்) இதுவும் ஒன்று. ஒளிமிக்க மணிகளால் இழைக்கப்பட்ட மாட மாளிகைகள் கொண்ட திவ்ய தேசம். திருமங்கையாழ்வார் காலத்தில் மிகச் சிறப்புற்ற இடமாக விளங்கி இருக்கக் கூடும்! ஆனால், இப்போது அங்கு சென்று பகவானை ஸேவிப்பவர்களுக்கு அவனே ஒரு திருமணிக்கூடம் என்று தோன்றும்.

நாம் பகவானிடம் பக்தி (அன்பு) கொண்டிருக்கிறோம். அவன் நம்மீது அன்பு கொண்டிருக்கிறான். அவனிடம் அன்பு (பக்தி) கொள்வது நம் கடமை; அவன் நம்மீது அன்பு

# ஸ்தலசயனத்துறைவார்

கொண்டிருப்பதற்கு அவனது கருணையே காரணம். நாம் அவனை நினைத்துக் கொண்டே இருப்பதில்லை; சிற்சில நேரங்களில் மறந்தும விடுகிறோம். ஆனால், நமக்குத் தாயாகவும் தந்தையாகவும் ஆசாரியனாகவும் இருக்கும் அவன் நம்மையும், நம்மைச் சேர்ந்தவர்களையும் உய்விக்கும் வழியையே சிந்தித்துக் கொண்டிருக்கிறான். நாம் அவனிடம் கொண்டிருக்கும் அன்பைவிட அவன் நம்மீது கொண்டிருக்கும் அன்பு கடலினும் பெரிது! அன்புக் கடல் அவனது மனக்கடலில் தேங்கி நிற்கிறது. அவன் மணிவண்ணனாதலால், அவனுள்ளத்தில் இருப்பது ஆண்டாளுக்குத் தோன்றுகிறது. 'மாலே

என்றழைத்து 'மணிவண்ணா' என்று வாய் குளிரக் கூறினான். அவனே இங்கு மணிக்கூடமாக இருந்துகொண்டு அடியார்கள்மீது தன் அன்பை விளக்கும் முறையில் 'திருமணிக்கூட நாயகன்' என்ற திருநாமத்தோடு எழுந்தருளி இருக்கிறான். நின்ற திருக்கோலம். இவனே கஜேந்திராழ்வானின் துயர் கெடுத்து அருளினான்' என்று தொடங்கி ஆழ்வார் மங்களாசாஸனம் செய்வதால் இவன் கஜேந்திர வரதன்!

எல்லாம் அவனே:- துன்பம் சேர்ந்தபோது அதைக்கண்டு வருந்தாமலும், இன்பம் ஏற்படும் போது அதை நினைத்து மகிழாமல் இருப்பவனே அறிவுள்ளவனாகக் கருதப்படுகிறான். உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் 'அவனே' என்றிருப்பவன் மஹாத்மா. எல்லா வினைகளும் வினைப்பயன்களும் (அவனே) பகவானே என்றிருப்பவனைத் தீவினைகள் அணுகா. புண்ணியமும் அவன்தான்! பாவமும் அவன்தான்! மோக்ஷமும் அவனே! சுகதுக்கங்களும் அவனே! ஸத்துவம் முதலிய எல்லாப் பண்புகளும் அவனே! ஸந்தேஹமும் அவன்தான். நிச்சயமும் அவன்தான்! உலகினுக்கு நன்மை தரும் மெய்யும்; பொய்யும் அவனே! விரும்பித் தொழும் மெய்யர்க்கே மெய்யனாகும்! பொய்யர்க்குப் பொய்யனாகும். உலகினுள்ளோரைக் காப்பாற்ற மழையைப் பொழிவிக்குமாறு மேகங்களுக்குக் கட்டளை இடுபவனும் அவனே! உலகத்தை இயக்குபவனே அவன்தான்! அவனன்றி ஓரணுவும் அசையாது. இவ்வளவு பெருமைகளோடு கூடியவன் திருமணிக்கூடத்தான்!

குளத்தில் தாமரை மலர்ந்திருக்கின்றன. அவற்றிலிருந்து தேன் வெள்ளமாகப் பெருகித் தண்ணீரில் விழுகிறது. தண்ணீரில் வாழும் வாளை மீன் அதைப்பருகிவிட்டுப் பெருங்களிப்போடு இங்கும் அங்கும் தண்ணீரில் பாய்கிறது. அதைக் கண்டு பயந்து கயல் மீன்கள் துள்ளித் துள்ளி அருகில் இருக்கும் நீர் நிலைகளை நாடிச் செல்லுகின்றனவாம். திருமணிக்கூடத்தான் திருவடி நிழலில் (அவனது அநுக்ர

றந்தைப் பெற்று) வாளை மீன்கள் வாழ்வதுபோல், கயல் மீன்களும்தான் வாழ்கின்றன! வாளை மகிழ்கிறது; கயல்மீன் அஞ்சுகிறது! வாளைக்கு மகிழ்ச்சியை அளிப்பவனே (பகவானே) கயலுக்கு அச்சத்தையும் அளிக்கிறன். இன்பமும், இன்பத்தை அளிப்பவனும் அவனே; துன்பமும், துன்பத்தை அளிப்பவனும் அவனே என்பதைத் திருமங்கையாழ்வார் திருமணிக்கூடத்தைக் காட்டி விளக்குகிறர்.

சங்கையும் துணிவும் பொய்யும் மெய்யுமித்தரணியோம்பும்
பொங்கிய முகிலும் அல்லாப் பொருள்களுமாய வெந்தை
பங்கயமுகுத்ததேறல் பருகியவாளை பாய
செங்கயலுகளும் நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே.

பெரிய திருமொழி 4-5-8

தீரும் நோய் வினைகளெல்லாம்!: —பகவானே மருத்துவன் தீராத நோய்களை எல்லாம் தீர்த்து வைக்கும் வைத்தியன். அவனது திருநாமத்தைச் சொன்னுலே போதும்! இந்நாளில் நம் பாபத்தைப் போக்கிக் கொள்ள எந்த வழியும் இல்லை; நம்மால் எந்த நல்வினைகளையும் செய்ய இயலாது. ஆனால் பகவானின் திருநாமங்களைப் (பெயர்களை)ச் சொல்லமுடியும்! அவனுக்குப் பல பெயர்கள் உண்டு அவற்றுள் ஏதேனும் ஒன்றைச் சொன்னுலே போதும்!

உலகில் வாழும்வரை பாபங்களும் நம்மை வந்தடைந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கும்; நமக்குத் துன்பத்தை அளித்துக் கொண்டுதான் இருக்கும். இவன் அறிவுள்ளவனு? அறிவில்லாதவனு? என்று பாவம் பார்ப்பதில்லை. அறிவுள்ளவனும் ஏதேனும் ஒரு வகையில் பாவத்தைச் செய்கிறன்; அறிவில்லாதவன் செய்தே தீருகிறன். எவரை ஏமாற்றினுலும் பாவத்தை ஏமாற்ற முடியாது நாம் எங்கு சென்றுலும் நம்மை அது விடுவதில்லை; பயனைக் கொடுத்துவிட்டுத்தான் செல்லும்! அப்பயனை அநுபவித்தே தீரவேண்டும்.

அப்படியாகில் பாவத்திலிருந்து விடுபடும் வழியே இல்லையா' என்று சிந்திக்க வேண்டா. பாலைப் பருகப் பருகப் பித்தம் தானாகவே நீங்கும். பகவானின் திருநாமத்தைச் சொல்வதற்கும் பாக்கியம் இருக்க வேண்டும். அவனது திருப்பெயரைச் சொல்லிக்கொண்டே இருந்தால் முன் செய்த தீவினைகள் அழிந்து மறைந்து போகும். யார் வேண்டுமானாலும் பகவானின் திருநாமத்தைச் சொல்லலாம். 'ஹரிர் ஹரி:' என்றால் பாவம் அழிந்து போகிறது. 'கேசவா' என்றால் நம் இடர் கெடும்; துன்பம் தரும் மற்ற வினைகளும் அழிந்து போகும். 'தாமோதரா' என்றால் நம்முடைய பாவங்கள் தீயினில் தூசாகும்! காலத்தின் சுபாவத்தாலும், மற்ற சூழ்நிலைகளாலும் உருவாகும் பாவமும் நம்மை அணுகா. தீவினை செய்வோரின் நடுவில், நாமும் வாழ்ந்தாலும் பாவம் நம்மை அடைவதில்லை. தாமரை இலையைத் தண்ணீர் ஒட்டுவதில்லை; பகவானின் திருநாமத்தைச் சொல்லுகிறவரைப் பாவம் ஒட்டுவதில்லை.

இவ்வளவு எளிய முறையில் பாவத்தைப் போக்கிக் கொள்ளும் வழியை அறியாமல் அலைகின்ற மடநெஞ்சே! இரத்தினமணிகள் இழைக்கப்பட்ட கூடத்தில் இருந்த (குவலயாபீடம் என்ற) யானையோடு போர் செய்து அதன் தந்தங்களைப் பறித்த கண்ணனே திருமணிக்கூடத்தில் இருப்பவன். திருமணிக் கூடத்து எம்பெருமானின் திருநாமத்தைச் சொல்! முன் செய்த தீவினையும் சேராது; பின் செய்யும் தீவினையும்வாராது என்கிறார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

சேராது முன்செய்த தீவினை பின்செய்வதுவும்
வாராது இனி நீ மடநெஞ்சே!—நேராகக்
குருமணிக்கூடத்து ஆனைக் கொம்பு பறித்தானைத்
திருமணிக்கூடத்தானைச் செப்பு. (நூற். திருப்-37)